**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.164/2023**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கனகராஜ் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | குத்தாலிங்கம் | தொழில் | : | சாக்கு தைத்தல் |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 64 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 21th, 2025.

**(1, 2, 6, 8 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் சாக்கு தைக்கும் தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அருணாச்சலத்தின் கட்டிடத்தின் அருகே எனது கடை உள்ளது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் பாவூர்சத்திரம் போலீசார் அருணாச்சலத்தின் கட்டிடத்தின் அருகே விசாரித்தார்கள். அப்போது, என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டு கொடுத்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>–**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் சம்பவம் குறித்து போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எழுதாத பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. அதில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசாரும் படித்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் வந்ததற்கு என்னிடம் அத்தாட்சியாக கையெழுத்து பெற்றார்கள். நான் அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.21 18:40:54 +0530